**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.169/2025** **தேதி.**10.11.2025

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு 10.11.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.கணேஷ்ராவ்** | **இனம்** | **ஆண்** |
| **த/பெ.** | **திரு.லட்சுமணராவ்** | **ஊர்/வட்டம்** | **இராணிப்பேட்டை/வாலாஜா** |
| **வயது** | 58/2025 | **தொழில்** | **--** |

துவக்க நேரம் 03.05 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

1. நான் ஏற்கனவே என் தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 9 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன். இந்த ஆவணத்தையும் என் தரப்பில் குறியீடு செய்கிறேன்.

| **வ. எ ண்** | **ஆவணம்** | **தன்மை** | **சான்றாவணம்** |
|---|---|---|---|
| 1 | **கடந்த 1975 தேதியிட்ட கிரைய பத்திரம்** | **சான்றிட்ட நகல்** | **வா.த.சா.ஆ–10** |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. நான் எந்த ஊரில், என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இராணிப்பேட்டையில் சொந்தமாக டிவி மெக்கானிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் பிறந்து, வளர்ந்து, தொழில் செய்து வருவது எல்லாம் இராணிப்பேட்டை என்றால் சரிதான். எனது தகப்பனார் எந்த ஊரை சேர்ந்தவர், என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் எனது தந்தையும்**

இராணிப்பேட்டையை சேர்ந்தவர்தான். அவர் துணி வியாபாரம் செய்து வந்து இறந்துவிட்டார். எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் கடந்த 1996ம் ஆண்டு இறந்தார்.

2. இந்த வழக்கில் பிரதிவாதி பாபு வெங்கட்ராவ் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது உடன்பிறந்த அண்ணன். எனது அண்ணன் எந்த ஊரில் இருக்கிறார் என்றால் கிருஷ்ணகிரியில் இருக்கிறார். எந்த ஆண்டு எனது அண்ணன் கிருஷ்ணகிரிக்கு சென்றார் என்றால் எனது அண்ணா 11ம் வகுப்பு பள்ளி படிப்பு முடிந்தவுடன் கிருஷ்ணகிரிக்கு சென்றுவிட்டார். அங்கு என்ற எனது அண்ணன் இருசக்கர வாகன பழுதுபார்க்கும் வேலையை செய்துவந்தார் என்றால் ஆமாம். இராணிப்பேட்டையில் உள்ள சொத்து சம்பந்தமாக பாகப்பிரிவினை கேட்டு என் சகோதரர் பாபு வெங்கட்ராவ் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. எனது அண்ணன் தாக்கல் செய்துள்ள வழக்கு எண்.191/2013 என்றால் சரிதான். மேற்படி எனது அண்ணன் தாக்கல் செய்த நிலுவையில் இருக்கும்பொழுது சில காலம் கழித்து நான் கிருஷ்ணகிரியில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்து தொடர்பான கிரையப்பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் குமார் பெயரில் உள்ளது. குமார் என்பவர் யார் என்றால் எனது மற்றொரு அண்ணன். குமார் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணகிரிக்கு சென்றுவிட்டார் என்றால் கடந்த 1970ம் ஆண்டு கிருஷ்ணகிரிக்கு சென்றுவிட்டார். அண்ணன் குமார் கிருஷ்ணகிரியில் என்ன தொழில் செய்தார் என்றால் அவர் துணி வியாபாரம் செய்தார். தற்பொழுது அண்ணன் குமார் உயிருடன் இல்லை.

4. குமார் கிரையம் பெற்ற சொத்தில்தான் அவர் தனது குடும்பத்துடன் கிருஷ்ணகிரியில் வசித்து வந்தார் என்றால் ஆமாம். குமார் இறப்பிற்கு பின்னிட்டு குமாரின் மனைவி அவர்களுக்கு விட்ட பாக வீட்டை பாபு வெங்கட்ராவ் இடம் ஒப்படைத்துவிட்டு சென்னைக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. சென்னைக்கு சென்றது உண்மைதான். அந்த வீட்டை பாபு வெங்கட்ராவ்வே எடுத்துக்கொண்டார். பாபு வெங்கட்ராவிற்கு வந்த பாக வீட்டில்தான் அவர் தற்பொழுது குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். பாபு வெங்கட்ராவ் எப்பொழுதிலிருந்து குடியிருந்து வருகிறார் என்றால் 1980லிருந்து குடியிருந்து வருகிறார். 1980லிருந்து குமாரும், பாபு வெங்கட்ராவும் குடியிருந்து வருகிறார்களா என்றால் அந்த இடத்தில் அவர்கள் இருவரும்தான் இருந்து வந்தார்கள்.

5. வழக்கு சொத்திற்கான வரிகளை பாபு வெங்கட்ராவ்தான் செலுத்தி வருகிறார் என்றால் ஆமாம். குமார், எங்களுக்கு எந்த சொத்தையும் எழுதிகொடுக்கவில்லை என்றால் ஆமாம். குமாருக்கும், பாபு வெங்கட்ராவிற்கும் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக கிருஷ்ணகிரியில் ஒரு வழக்கு நடந்து வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில்தான் குமாரும், பாபு வெங்கட்ராவும் தாவா சொத்தில் உள்ள வீட்டை இரண்டாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆமாம்.

6. இந்த தாவா சொத்து உள்ள வீட்டை எனது அப்பா வாங்கி கொடுத்தார் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அது என்ன ஆவணம் என்றால் ஆரணி சொத்து பத்திரத்தில் வழக்கு சொத்து சம்பந்தமாக எழுதியுள்ளார்கள். அந்த ஆரணி சொத்து பத்திரத்தில், கிருஷ்ணகிரியில் உள்ள தாவா சொத்தில் உள்ள சர்வே எண்ணை எழுதியள்ளார்களா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டை கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் பெற்றுதான் கட்டப்பட்டது என்றால் ஆமாம். அந்த கடன் யார் பெயரில் பெறப்பட்டது என்றால் பாபு வெங்கட்ராவ் பெயரிலும், குமார் பெயரில் வாங்கப்பட்டது.

7. மேற்படி நிலவள வங்கியில் பெற்ற கடனை குமாரும், பாபு வெங்கட்ராவும் அடைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கலெல்லாம் கூட்டுகுடும்பத்தில் அந்த வருமானத்தை வைத்து கடனை அடைத்தோம். எந்த ஆண்டில், எவ்வளவு தொகையை கூட்டுகுடும்பத்தில் இருந்து எடுத்து கடனை அடைத்தோம் என்றால் சரியாக தெரியவில்லை. ஆனால் எல்லோரும் சேர்ந்துதான் அடைத்தோம். எந்த ஆண்டு வரை அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்றால் 1996 வரை கூட்டு குடும்பமாக அப்பாவின் இறப்பு வரை கூட்டுகுடும்பமாக இருந்தோம்.

8. கடந்த 1996ம் ஆண்டிற்கு பிறகு நாங்கள் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் செய்துகொண்டோம். அந்த பாகப்பிரிவினையில் இந்த கிருஷ்ணகிரி வீட்டை காட்டவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்து குமாருக்கும், பாபு வெங்கட்ராவுக்கும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. இராணிப்பேட்டையில் உள்ள கூட்டுகுடும்ப சொத்தான வீட்டில் பாபு வெங்கட்ராவ் பாகம்கேட்டு வழக்கு போட்டதால் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. கிருஷ்ணகிரியில் உள்ள வீட்டிற்கு நாங்கள் யாரும் கடனை அடைக்கவில்லை என்றாலும், எவ்வித தொகையையும் கொடுக்கவில்லை

**என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு எனது தந்தை எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த உதவியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனவே தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.**

**மறு விசாரணை :– இல்லை.**

முடிவு நேரம் 03.40 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.